**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**முன்னிலை : திரு. A. தமிழ்செல்வன், எம்.எல்.,**

**முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி, விழுப்புரம்**

**2025ம் ஆண்டு மார்ச் திங்கள் 20ம் நாள் வியாழக்கிழமை**

**IA.1/2024**

**in**

**OS.292/2012**

**(CNR.No.TNVP02-000297-2012)**

1. முருகன்
2. அஞ்சலை அம்மாள்
3. பெரியநாயகம் அம்மாள்
4. பார்வதி .... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. புட்லாயி
2. குமரவேல்
3. கலியம்மாள்
4. சுகந்தி .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

5. அரசாயி
6. சந்திரலேகா
7. ரேவதி
8. விஜயலட்சுமி .... எதிர்மனுதாரர்கள்/உத்தேசிக்கப்பட்ட 5 முதல் 8 பிரதிவாதிகள்

இம்மனு 21.03.2024 தேதியில் தாக்கல் செய்யப்பட்டு 25.03.2024 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு கடந்த 14.03.2025 அன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்

திரு.M.பாலகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கு.பா.பழனியப்பன் அவர்கள் ஆஜராகியும், 5 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.அ.சக்கரவர்த்தி அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலினை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனு சி.பி.சி. கட்டளை 1 விதி 10(2)-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு அதில் அசல் வழக்கில் காலஞ்சென்ற இருசன் என்பவரின் பெண் வாரிசுகளான அரசாயி, சந்திரலேகா, ரேவதி, விஜயலட்சுமி ஆகியோர்களை 5 முதல் 8 பிரதிவாதிகளாக சேர்க்க உத்தரவிட பரிகாரம் வேண்டப்பட்டுள்ளது.

**2. மனு மற்றும் அபிடவிட்டின் சுருக்கம் பின்வருமாறு :-**

மனுதாரர் தரப்பில் தான் மேற்படி மனுவில் மனுதாரர் என்றும் மேற்படி அசல் வழக்கில் 1ம் வாதி என்றும் மேற்படி அசல் வழக்கு மனுதாரர் மற்றும் இதர வாதிகளும் தாவா பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்துக்களை பாகம் பிரித்துத்தர வேண்டியும், இதர பரிகாரங்களுக்காகவும் சமூகம் நீதிமன்றத்தில் தாவா தாக்கல் செய்துள்ளதாகவும் லட்சமணன் குமாரர் இருசன் என்பவர் கடந்த 27.11.1998 அன்று தன்னையும், 2ம் பிரதிவாதி முருகவேல் மற்றும் அரசாயி, சந்திரலேகா, ரேவதி, விஜயலட்சுமி ஆகிய பெண் வாரிசுகளும் மற்றும் 2ம் வாதி அஞ்சலை அம்மாள், 1ம் பிரதிவாதி புட்லாயி ஆகிய மனைவிகளையும் வாரிசுகளாக விட்டு காலமாகிவிட்டார் என்றும் தான் மேற்படி அசல் வழக்கில் தாக்கல் செய்யும் காலத்தில் தன்னுடைய அரியாமையினாலும்,

கவனக்குறைவாலும், தனது தகப்பனார் இருசன் என்பவருக்கு பெண் வாரிசுகளான மேற்படி அரசாயி, சந்திரலேகா, ரேவதி, விஜயலட்சுமி ஆகியோர்களை அவசிய தரப்பினர்களாக இருந்தபோதிலும் அவர்களை பிரதிவாதிகளாக சேர்க்காமல் விட்டுவிட்டதாகவும் இது வேண்டுமென்றே நடந்ததல்ல, தன்னையும் மீறிய செயலாகும் என்றும் மேற்படி நபர்களை மேற்படி அசல் வழக்கில் 5 முதல் 8 பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டியது அவசியமாகிறது என்றும் அதனால் மேற்படி அசல் வழக்கில் வாதுரையில் எந்த பாதகமும் ஏற்படாது என்றும் வழக்கில் தீர்வு செய்ய சமூகம் நீதிமன்றத்தாருக்கு ஏதுவாக இருக்கும் என்றும் மேற்படி அசல் வழக்கில் தனக்கு நல்ல கட்சி உள்ளது என்றும் ஆகையால் சமூகம் நீதிமன்றத்தார் அவர்கள் தயவு கூர்ந்து மேலே கண்டுள்ள காரணங்களை கருத்தில்கொண்டு மேற்படி அசல் வழக்கில் காலஞ்சென்ற இருசன் என்பவரின் பெண் வாரிசுகளான அரசாயி, சந்திரலேகா, ரேவதி, விஜயலட்சுமி ஆகியோர்களை 5 முதல் 8 பிரதிவாதிகளாக சேர்க்க உத்தரவிட வேண்டியத நியாயமும், அவசியமும் ஆகிறது என்றும் இல்லையேல் தனக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் சம்பவிக்கும் என்றும் மனு மற்றும் அபிடவிட்டில் கூறப்பட்டுள்ளது.

**<u>3. 5 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்யும் ஆட்சேபணையின் சுருக்கம் பின்வருமாறு :-</u>**

இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாணப்பத்திரிக்கையில் காணப்படும் விபரங்கள் யாவும் பொய்யும் கற்பனையுமானவை என்றும் உண்மைக்கு புறம்பானவை என்றும் முன்னுக்குப்பின் முரணானவை என்றும் வேண்டுமென்றே பொய்யுரைகளை இட்டுக் கட்டி கூறப்பட்டுள்ளவை என்றும் நீதிமன்ற பரிசீலனைக்கு உகந்ததல்ல என்றும் சட்டப்படி எந்த ஒரு பகுதியையும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை என்றும் அவைகளை இந்த எதிர்மனுதாரர்கள்/

உத்தேசிக்கப்பட்ட 5 முதல் 8 பிரதிவாதிகள் மறுதலிப்பதோடு அவைகளையும் அது சார்ந்த மனுவையும் எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டுமென்று என்றும் மனுவுடன் தாக்கல் செய்யப்ப்டுள்ள பிரமாணப்பத்திரிக்கையில் கூறியுள்ள சங்கதிகளில் மனுதாரர் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்பது மட்டில் உண்மையாகும் என்றும் மற்ற சங்கதிகள் அனைத்தையும் மனுதாரர் நிரூபணம் செய்ய கடமைப்பட்டவர் ஆவார் என்றும் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாணப்பத்திரிக்கையில் 3வது பத்தியில் லட்சுமணன் குமாரர் இருசன் என்பவர் கடந்த 27.11.1998 அன்று 1வது மனுதாரரையும் 2ம் பிரதிவாதி, முருகவேல் மற்றும் அரசாயி சந்திரலேகா, ரேவதி விஜயலட்சுமி ஆகிய பெண் வாரிசுகளையும் மற்றும் 2ம் வாதி அஞ்சலை அம்மாள், 1ம் பிரதிவாதி புட்லாயி ஆகியோர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு காலமாகி விட்டது போலவும் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானதாகும் என்றும் அதனை இந்த எதிர்மனுதாரர்கள் குறிப்பாகவும் மொத்தமாகவும் மறுத்தலிக்கிறார்கள் என்றும் அதனை மனுதாரர் நிரூபணம் செய்ய கடமைப்பட்டவர் என்றும் உண்மையில் மேற்படி லட்சுமணன் குமாரர் இருசன் என்பவருக்கு புட்லாயி என்ற மனைவியும், குமரவேல் என்ற மகனும் இவர்களை தவிர அரசாயி, சந்திரலேகா ரேவதி மற்றும் விஜயலட்சுமி ஆகியோர்கள் தான் உண்மையான வாரிசுதாரர்கள் என்றும் மேலும் மேற்படி வழக்கு சொத்துக்களை இருசன் என்பவர் தான் அனுபவித்த வந்து சொத்தை அவர் உயிருடன் இருந்தபோதே கடந்த 17.01.1990 தேதியன்று வழக்கு 2ம் பிரதிவாதியான குமரவேல் என்பவருக்கு கார்டியனாக மேற்படி வழக்கு 1ம் பிரதிவாதியான புட்லாயி அவர்களை நியமித்து ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் ஒன்றை வளவனூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.46/1990 ஆக பதிவு செய்யப்பட்டது என்றும் இந்த விவரங்கள் இந்த எதிர்மனுதாரர்களுக்கும், வழக்கு வாதிகளுக்கும் நன்றாகவே தெரியும் என்றும் மேலும் மேற்படி சொத்தில்

2ம் பிரதிவாதி குமரவேல் என்பவருக்கே முழு உரிமையுள்ளது என்றும் அவரை தவிர வேறுயாரும் மேற்படி சொத்தில் உரிமை கோர முடியாது என்றும் மேற்படி மனுவில் குறிப்பிட்டுள்ள காரணங்கள் அனைத்தையும் மனுதாரர் நிரூபணம் செய்ய கடமைப்பட்டவர் என்றும் அவர் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானதாகும் என்றும் இந்த மனு தள்ளுபடி செய்ய லாயக்கானதாகும் என்றும் எனவே சமூகம் நீதிமன்றதார் அவர்கள் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவை எதிர்மனுதாரர்களுடைய செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவு செய்ய வேண்டும் என்றும் ஆட்சேபணையில் கூறப்பட்டுள்ளது.

**<u>4. 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்யும் ஆட்சேபணையின் சுருக்கம் பின்வருமாறு :-</u>**

இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாணப்பத்திரிக்கையில் காணப்படும் விபரங்கள் யாவும் பொய்யும் கற்பனையுமானவை என்றும் உண்மைக்கு புறம்பானவை என்றும் முன்னுக்குப்பின் முரணானவை என்றும் வேண்டுமென்றே பொய்யுரைகளை இட்டுக் கட்டி கூறப்பட்டுள்ளவை என்றும் நீதிமன்ற பரிசீலனைக்கு உகந்ததல்ல என்றும் சட்டப்படி எந்த ஒரு பகுதியையும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை என்றும் அவைகளை இந்த எதிர்மனுதாரர்கள்/1ம் பிரதிவாதி மறுதலிப்பதோடு அவைகளையும் அது சார்ந்த மனுவையும் எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டுமென்று என்றும் மனுவுடன் தாக்கல் செய்யப்ப்டுள்ள பிரமாணப்பத்திரிக்கையில் கூறியுள்ள சங்கதிகளில் மனுதாரர் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்பது மட்டில் உண்மையாகும் என்றும் மற்ற சங்கதிகள் அனைத்தையும் மனுதாரர் நிரூபணம் செய்ய கடமைப்பட்டவர் ஆவார் என்றும் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள

பிரமாணப்பத்திரிக்கையின் 3வது பத்தியில் லட்சுமணன் குமாரர் இருசன் என்பவர் கடந்த 27.11.1998 அன்று மனுதாரரையும் 2ம் பிரதிவாதி, முருகவேல் மற்றும் அரசாயி சந்திரலேகா, ரேவதி விஜயலட்சுமி ஆகிய பெண் வாரிசுகளையும் மற்றும் அஞ்சலை அம்மாள், புட்லாயி ஆகியோர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு காலமாகி விட்டது போலவும் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானதாகும் என்றும் அதனை இந்த எதிர்மனுதாரர்கள் குறிப்பாகவும் மொத்தமாகவும் மறுத்தலிக்கிறார்கள் என்றும் அதனை மனுதாரர் நிரூபணம் செய்ய கடமைப்பட்டவர் என்றும் உண்மையில் மேற்படி லட்சுமணன் குமாரர் இருசன் அவர்களுக்கு 1ம் எதிர்மனுதாரர் மட்டுமே சட்டப்படியான மனைவி என்றும் அந்த வகையில் இருசன் அவர்களுக்கு குமரவேல் மற்றும் அரசாயி, சந்திரலேகா, ரேவதி, விஜயலட்சுமி ஆகியோர் மட்டும் வாரிசுகள் என்றும் மேற்படி நபர்கள் இருசன் அவர்களுடைய வாரிசுதாரர்கள் என்பதை தெரிந்ததால் தான் இந்த வாதிகள் தாக்கல் செய்துள்ள பிராதில் 5வது பத்தியில் தெரிவித்துள்ளார்கள் என்றும் மேற்படி அரசாயி, சந்திரலேகா, ரேவதி மற்றும் விஜயலட்சுமி ஆகியோர்கள் இருசன் அவர்களுடைய வாரிசுதாரர்கள் என்றும் இந்த வாதிகள் தெரிந்துகொண்டே தான் வேண்டுமென்றே அவர்களை இந்த வழக்கின் ஒரு தரப்பினர்களாக சேர்க்காமல் விட்டுவிட்டார்கள் என்றும் சட்டம் அறியாமை என்று பொய்யாக குறிப்பிட்டுள்ளார் என்றும் மேற்படி சேர்க்கப்பட வேண்டிய நபர்கள் இருசன் என்பவரது வாரிசுகள் என்பதை அறிந்து அவர்கள் வாரிசுகள் என குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்த நிலையில் அவர்களை கவனக்குறைவாக சேர்க்காமல் விட்டுவிட்டேன் என்பது ஏற்றுக்கொள்ள முடியாததாகும் என்றும் மேலும் மனுதாரர் வேண்டுமென்றே காலதாமதமாக வழக்கு தாக்கல் செய்து 12 ஆண்டுகள் கழித்து இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும் எனவே இந்த மனு ஏற்றுக்கொள்ள கூடியதல்ல என்றும் மேற்படி மனுவில் குறிப்பிட்டுள்ள காரணங்கள் அனைத்தையும் மனுதாரர்

நிருபணம் செய்ய கடமைப்பட்டவர் ஆவார் என்றும் அவர் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானதாகும் என்றும் எனவே இந்த மனு தள்ளுபடி செய்ய லாயக்கானதாகும் என்றும் எனவே சமூகம் நீதிமன்றத்தார் அவர்கள் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவை எதிர்மனுதாரர்களுடைய செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவு செய்ய வேண்டும் என்றும் ஆட்சேபணையில் கூறப்பட்டுள்ளது.

5. இரு தரப்பிலும் எவ்வித சாட்சிய சான்றாவணங்களும் விசாரித்து குறியிடப்படவில்லை. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

## 6. தீர்வுக்கான பிரச்சினை :-

மனுதாரர் மனுவில் கோரிய பரிகாரம் வழங்கி மனு அனுமதிக்கத்தக்கதா ? அல்லது இல்லையா ? என்பதே இம்மனுவில் தீர்வு காண வேண்டிய பிரச்சனையாகும்?

## 7. தீர்வு :-

மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், மனுதாரர்கள் பாகப்பிரிவினைக்காக 1 முதல் 4 பிரதிவாதிகள் மீது அசல் வழக்கு தாக்கல் செய்து விசாரணையில் இருந்து வருகிறது என்றும் இருசன் என்பவருக்கு 2ம் வாதி அஞ்சலையம்மாள் மற்றும் 1ம் பிரதிவாதி புட்லாயி ஆகியோர்கள் மனைவிகள் என்றும் 1ம் வாதி முருகன் 2ம் பிரதிவாதி குமரவேல் மற்றும் அரசாயி, சந்திரலேகா, ரேவதி, விஜயலட்சுமி ஆகியோர்கள் மகள்கள் என்றும் அசல் வழக்கு தாக்கல் செய்தபோது கவனக்குறைவாக இருசன் என்பவரின்

பெண் வாரிசுகளை சேர்க்காமல் விடுபட்டதால் அவர்களை இந்த வழக்கில் 5 முதல் 8 பிரதிவாதிகளாக காட்டி தரப்பினர்களாக சேர்க்க இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் ஆகவே மனு அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் வாதிட்டார்.

8. எதிர்மனுதாரர்கள் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் தம்முடைய வாதத்தில், லட்சுமணன் குமாரர் இருசன் என்பவருக்கு 2ம் எதிர்மனுதாரர் புட்லாயி என்பவர் மட்டுமே மனைவி என்றும் அந்த வகையில் 2ம் பிரதிவாதி குமரவேல் மற்றும் அரசாயி, சந்திரலேகா, ரேவதி மற்றும் விஜயலட்சுமி ஆகியோர்கள் மட்டுமே வாரிசுகள் என்றும் அவர்கள் வாரிசுகள் என்று நன்கு தெரிந்திருந்தும் வேண்டுமென்றே அவர்களை தரப்பினர்களாக சேர்க்காமல் மனுதாரர்கள்/வாதிகள் விட்டுள்ளார்கள் என்றும் 12 ஆண்டுகள் கழித்து மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனு ஏற்கத்தக்கதல்ல என்றும் தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் வாதிட்டார்.

9. இரு தரப்பு வாதங்கள் மற்றும் வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலித்ததில், தாவா 'பி' அட்டவணை சொத்துக்கள் தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான சொத்துக்கள் என்றும் அதனை லட்சுமணன் என்பவர் அனுபவித்து வந்து இறந்துபோய்விட்டார் என்றும் தற்போது அவருக்கு வாரிசாக உள்ளவர்களை சேர்த்து பாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கிடையில் லட்சுமணன் என்பவரின் மகனான இருசன் என்பவர் வழக்கிற்கு முன்பே இறந்துவிட்ட நிலையில் அவரது பெண் வாரிசுகளை சேர்க்காமல் அசல் வழக்கு நடைபெற்ற நிலையில் தற்போது பெண் வாரிசுகளை 5 முதல் 8 பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கினை மேல் நடத்த கட்டளை 1 விதி 10-ன் கீழ் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஒரு பாகப்பிரிவினை வழக்கில் வழக்கின் தீர்ப்பில்

பாதிக்கப்படக்கூடிய நபர்களின் உரிமைகளை பாதுகாக்கும் நோக்கில் தேவையான தரப்பினர்களாக மகள்களும் பிற வாரிசு உரிமைதாரர்களும் சேர்க்கப்பட வேண்டும். அவ்வாறு அவசிய தரப்பினர்களை சேர்க்கப்படாமல் அநத் பாக வழக்கு திறம்பட தீர்மானிக்க இயலாது.

10. 5 முதல் 8 பிரதிவாதிகளாக சேர்க்கக்கோரும் நபர்கள் இறந்துபோன இருசன் என்பவரின் பெண் வாரிசுகள் என்பதில் 1 முதல் 4 எதிர்மனுதாரர்களுக்கு ஆட்சேபணை இல்லை. காலம்கடந்து அவர்களை சேர்க்க முயற்சிக்கிறார்கள் என்பது தான் அவரது ஆட்சேபணை. மேற்படியார்கள் அவர்களது எதிர்வழக்குரையில் 5 முதல் 8 பிரதிவாதிகளாக சேர்க்கக்கோரும் நபர்கள் இருசனின் மகள்கள் என்று 06.06.2017 தேதியில் குறிப்பிட்டுள்ளார்கள். இருப்பினும் மனுதாரர்/வாதிகள் உடனடியாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. 20.03.2024 தேதியில் தான் தாக்கல் செய்துள்ளார்கள். இருப்பினும் பாக வழக்கு அனைவரும் வாதிகள் மற்றும் அனைவரும் பிரதிவாதிகள் என்று பாவிக்க வேண்டும் என்று தீர்வு செய்யப்பட்ட வழக்கு. 1 முதல் 4 பிரதிவாதிகள் மற்ற வாரிசுகள் சேர்க்கப்படவில்லை என்று ஆட்சேபிக்கவும் இல்லை. அவர்களாக 5 முதல் 8 பிரதிவாதிகளாக சேர்க்க கோருகிறவர்களை தரப்பினர்களாக சேர்க்க வேண்டும் என்று எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. காலம் கடந்து எடுக்கப்பட்டாலும் 5 முதல் 8 பிரதிவாதிகளுக்கு எதிரான வழக்கு காலவரை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளதா என்று முழு விசாரணைக்கு பிறகு சாட்சிகள், சான்றாவணங்கள் தாக்கல் செய்தால் தான் தெரியவரும். ஆகவே, 5 முதல் 8 பிரதிவாதிகளாக சேர்க்கக்கோரும் நபர்கள் இறந்துபோன இருசன் என்பவரின் வாரிசுகள் என்பதால் அவர்கள் அவசிய தரப்பினர்கள், அதனால் மனு அனுமதிக்கத்தக்கது என்றே இந்த நீதிமன்றம் கருதுகிறது.

11. மேலே கண்ட காரணங்களால் இந்த மனு அனுமதிக்கத்தக்கது என்றே இந்த நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறே தீர்வு காண்கிறது.

**முடிவாக,** மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, சுருக்கெழுத்தரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் 20.03.2025 இன்று பகரப்பட்டது.

A TAMILSELVAN
Digitally signed by A TAMILSELVAN
Date: 2025.03.24 18:55:47 +0530

முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.

**இணைப்பு :-**

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :-**

(இல்லை)

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :-**

(இல்லை.)

A TAMILSELVAN
Digitally signed by A TAMILSELVAN
Date: 2025.03.24 18:55:52 +0530

முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.